கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

அ.வ.எண்.105/2021

வா.சா.3 - ராஜேஷ்

நாள்.16.02.2026 த/பெ - தங்கபெருமாள்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1) நில ஆர்ஜித நடவடிக்கைகள் நடைபெற்று வந்த சமயத்தில் நான் வள்ளியூர் அலுவலகத்தில் பணியில் இருந்தேனா என்றால் இல்லை. நான் ஆவணங்களை பார்த்துதான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான்.பொதுவாக நான்கு வழி சாலைக்காக நில ஆர்ஜிதம் செய்யும் போது ஒரு தமிழ் நாளிதழிலும், ஒரு ஆங்கில நாளிதழிலும் அறிவிப்பு கொடுக்கப்படும் என்றால் சரிதான். தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் அறிவிக்கையை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அறிவிக்கையிலும் இதர ஆவணங்களிலும் நில ஆர்ஜித செய்யப்படும் நிலத்தின் சர்வே எண் மட்டும் குறிப்பிடப்பட்டிருக்கும் உரிமையாளரின் பெயர் குறிப்பிடப்படமாட்டாது என்றால் சரியல்ல, அறிவிக்கையில் உரிமையாளரின் பெயரும் குறிப்பிடப்பட்டிருக்கும். நில உரிமையாளருக்கு அறிவிக்கையை தவிர்த்து தனியாக அறிவிப்பு எதுவும் கொடுக்கப்படுமா என்றால் இல்லை, நில உரிமையாளர் அறிவிக்கை மூலம் தான் தெரிந்து கொள்ளமுடியும்.

2) பொதுவாக நில ஆர்ஜிதம் செய்யும் போது நிலத்தின் மூல உரிமை ஆவணங்களை பரிசீலனை செய்யாமல்தான் அறிவிக்கை கொடுக்கப்படும் என்றால் சரிதான், ஆனால் கிராம ஆவணங்களை ஆய்வு செய்துதான் அறிவிக்கை கொடுக்கப்படும். கிராம ஆவணங்கள் என்றால் என்ன ஆவணம் என்றால் பட்டாவாகும். எங்கள் பிரிவின் விதிப்படி நில ஆர்ஜிதம் செய்யப்படும் நில உரிமையாளர் இறந்துவிட்டாலோ, தவறுதலாக பட்டாவில் பெயர் இருந்தாலோ அதை கருத்தில் கொள்ளாமல் அவருக்கு தான் இழப்பீடு தொகை வழங்கப்படும் என்றால் சரியல்ல, விசாரணை செய்து தான் இழப்பீடு தொகை வழங்குவோம். மேற்படி விசாரணை செய்யும் அதிகாரம் உள்ளவர் யார் என்றால் முதலில் சிறப்பு தனி வட்டாட்சியர் தான் விசாரணை செய்வார்.

MITHUNA A KAISER

Digitally signed by MITHUNA A KAISER
Date: 2026.02.16 15:35:30 +0530

3) நில ஆர்ஜிதம் செய்யப்படும் நிலத்தில் உரிமை பிரச்சனை இருந்தால் நீதிமன்றம் மூலம் தான் பரிகாரம் தேடி கொள்ள அறிவுறுத்துவீர்கள் என்றால் சரிதான். பட்டாவில் பல நபர்கள் பெயர் இருந்தால் நாங்களே சமரசம் பேசி இழப்பீடு அளிப்போம் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் தங்கராஜ் என்பவரின் வாக்குமூலத்தை வாங்க என்ன காரணம் என்றால் பட்டாவில் அவர் பெயர் இருந்தது. நில ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலம் தங்கராஜுக்கு சொந்தமான நிலமா அல்லது எதிர் தரப்பினருக்கு சொந்தமான நிலமா என்ற விவரம் எங்களுக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது, ஆனால் தங்கராஜ் நில ஆர்ஜிதம் செய்யப்படும் இடம் அவருக்கு உரிய இடம் இல்லை என வாக்குமூலம் அளித்தார். என்னிடம் காட்டப்படும் சா.சா.ஆ.5 வாக்குமூலம் படிப்பதற்கு சிரமமாக இருக்கும் வகையில் உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி வாக்குமூலத்தை சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாங்கப்படுமா என்றால் இல்லை.

4) என்னிடம் காட்டப்படும் சா.சா.ஆ.5 வாக்குமூலத்தில் கையொப்பத்திற்கும் வாக்குமூல சரத்திற்கும் இடையை இடைவெளி உள்ளது வெற்று தாளில் கையொப்பம் வாங்கியது போல் உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி சா.சா.ஆ.5 வாக்குமூலத்தில் சாட்சிகள் ஏதும் இல்லை என்றால் சரிதான். மேற்படி சா.சா.ஆ.5 வாக்குமூலம் கொடுக்கும் சமயம் அவரது அடையாள அட்டை பரிசீலனை செய்யப்பட்டதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வாக்குமூலத்தை பதிவு செய்த தனி வட்டாட்சியர் யார் என்றால் எனக்கு பெயர் தெரியாது. மேற்படி வாக்குமூலத்தை பதிவு செய்ய தனி வட்டாட்சியரை விசாரித்தால் தான் வாக்குமூலம் எப்போது வாங்கப்பட்டது எங்கு வைத்து வாங்கப்பட்டது எந்த சூழ்நிலையில் வாங்கப்பட்டது என்ற விவரம் தெரியும் என்றால் சரிதான். அலுவலக ஆவணப்படி வாக்குமூலம் கொடுக்கப்பட்ட காலத்தில் யார் தனி வட்டாட்சியராக பணிபுரிந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

5) அடையாள அட்டை பற்றிய குறிப்புகள் ஏதுவும் இல்லாததால் தங்காராஜ் அல்லாமல் வேறு நபர் கூட வாக்குமூலம் கொடுத்து இருந்தாலும் அது பற்றி தெரியாது என்றால் சரிதான். எங்கள் அலுவலக ஆவணப்படி சர்வே எண்.1287/4 ல் எவ்வளவு நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது என்றால் சர்வே எண்.1287/4B2 ல் 1000 சதுர மீட்டரும், சர்வே எண்.1287/4c2 ல் 300 சதுர மீட்டரும் ஆர்ஜிதம் செய்யப்பட்டது. ஆர்ஜிதம் செய்யப்பட்ட பகுதி



MITHUNA A KAISER
Digitally signed by MITHUNA A KAISER
Date: 2026.02.16 15:35:34 +0530

மட்டும் தான் தனியாக சர்வே எண்கள்.1287/4B2, 1287/4c2 என தனியாக உட்பிரி வு செய்யப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண்.1287/ 4B ன் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 0.60.5 ஆகும். மேற்படி 60 ஏர்ஸ்க்கான அனைத்து உரிமையாளரை எனக்கு தெரியாது என்றால் சரிதான். நாங்களே முறையாக விசாரணை செய்யாமல் ஆர்ஜிதம் செய்யப்பட்ட பகுதிக்கு உரிமையாளர் முத்துகிருஷ்ணன் என தவறாக முடிவு செய்து இழப்பீடு வழங்கி உள்ளோம் என்றால் சரியல்ல. நில ஆர்ஜிதம் இழப்பீடு சம்மந்தமாக தனிப்பட்ட முறையில் தங்கராஜ் என்பவருக்கு எங்கள் அலுவலகத்தில் இருந்து அறிவிப்பு அனுப்பப்படவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள சா.சா.ஆ.5 வாக்குமூலத்தில் தங்கராஜ் கையொப்பம் இடவில்லை என்றாலும், ஆல்மாறாட்டத்தின் மூலும் வேறு நபர்களை கொண்டு கையொப்பம் இட்டு அதன் மூலம் தவறாக முத்துகிருஷ்ணன் என்பவருக்கு இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

6) நில ஆர்ஜிதம் சம்மந்தமாக புல வரைபடம் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி புலவரைபடத்தை பார்த்தால் தான் சர்வே எண்.1287/4B ல் இருந்து ஆர்ஜிதம் செய்யப்பட்ட சர்வே எண்.1287/4B2 ஐ அடையாளம் காணமுடியும் என்றால் சரிதான். நில ஆர்ஜிதம் செய்யப்பட்ட பகுதியையும் வழக்கு சொத்தையும் பிரித்து பார்க்கவேண்டும் என்றால் புல வரைபடத்தை பார்த்தால் தான் முடியும் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள சா.சா.ஆ.1 முதல் சா.சா.ஆ.5 வரை உள்ள ஆவணங்களில் கையொப்பமிட்ட சிறப்பு வட்டாட்சியர் பெயர் உள்ளிட்ட விவரம் தெரியாததால் அவருக்காக நான் சாட்சியம் அளிக்கமுடியாது என்றாலும் எனது சாட்சியம் செல்லத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல, நான் ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன்.

(2ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

MITHUNA A KAISER

Digitally signed by MITHUNA A KAISER
Date: 2026.02.16 15:35:38 +0530